கூடலூர் நகராட்சி(நீலகிரி)

**30.07.2019 ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் பொருட்கள்**

**தலைமை– திரு.பா.நாராயணன்.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

1) முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை முதிர்கன்னி மாற்றுத் திறனாளி மற்றும் DDWP உதவித் தொகை பெறுவதற்கு வறுமை கோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 10 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.கதியும்மா,<br>க/பெ.மாயி(லேட்)<br>க.எண்.17/325, அள்ளூர்,<br>கூடலூர் | – | முதியோர் |
| 2 | திருமதி.லட்சுமி,<br>க/பெ.ராமன் (லேட்)<br>20/612, முதல் மைல்,<br>கூடலூர் | – | முதியோர் |
| 3 | திருமதி.லட்சுமி,<br>க/பெ.தங்கராஜ், 7/153, கோழிப்பாலம். | – | விதவை |
| 4 | திருமதி.ராஜேஸ்வரி,<br>க/பெ.ஈஸ்வரன்,<br>க.எண்.11/293, எம்.ஜி.ஆர் நகர் | – | விதவை |
| 5 | திருமதி.சரஸ்வதி,<br>க/பெ.கருப்பன்,<br>க.எண்.5/488, கோத்தரவயல் | – | முதியோர் |
| 6 | திருமதி.கரிக்கி,<br>க/பெ.நாயக்கன், 5/490<br>கோத்தரவயல் | – | முதியோர் |
| 7 | திருமதி.கோத்தி,<br>க/பெ.பெள்ளன்,க.எண்.5/500<br>கோத்தரவயல் | – | முதியோர் |
| 8 | திருமதி.ஒணத்தி,<br>க/பெ.ராஜன், க.எண்.5/487<br>கோத்தரவயல் | – | முதியோர் |
| 9 | திருமதி.கெம்பி,<br>க/பெ.ராஜன்,க.எண்.5/483<br>கோத்தரவயல் | – | முதியோர் |
| 10 | திருமதி.வெள்ளச்சி,<br>க/பெ.கிருஷ்ணண்,க.எண்.5/496<br>கோத்தரவயல் | – | முதியோர் |

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு.குள்ளன்,<br>த/பெ.மாதன், க.எண்.5/484<br>கோத்தரவயல் | – | முதியோர் |
| 12 | திரு.கேசவன்<br>த/பெ.முரடன்<br>க.எண்.2/100A<br>யாணைசெத்தகொல்லி. | – | முதியோர் |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

2) துணை இயக்குநர் மற்றும் பொது சுகாதாரம் நோய் தடுப்பு துறை, உதகமண்டலம் அவர்களின் கடிதத்தின்படி கூடலூர் நகராட்சி பகுதியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் தடுப்பு பணிகள் மேற்கொள்ள தினசரி பதிமூன்று நபர்கள் வீதம் 60 நாட்களுக்கு ரூ.200/– வீதம் வழங்கவும் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள DBC பணியாளர்களுக்கு ரூ.160000/– மட்டும் நிதி காசோலை எண்.553395 நாள் 28.02.2019 ல் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே கொசுப்புழு ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள DBC பணியாளர்களை 07.2019 தேதி முதல் பணியில் அமர்த்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

3) பொதுசுகாதாரப் பிரிவில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் நடவடிக்கைக்காக கொசு புகை மருந்து தெளிப்பான் (Fogging) பயன்படுத்த புகை மருந்து இருப்பில் இல்லாததால் அவசர அவசியம் கருதி Butane Gas Cylinder 12 (பணிரெண்டு) எண்ணிக்கை வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.3000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

4) மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பொதுசுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்படும் கழிப்பிடங்களின் புகைப்படங்கள், உரக்கிடங்கில் பிளாஸ்டிக் தரம் பிரித்து வழங்கும் புகைப்படங்கள் மற்றும் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை குறித்த விரிவான அறிக்கை புத்தகங்கள், புகைப்படங்கள் மற்றும் CD (ஏப்ரல் மற்றும் ஜுன் 2019) தயாரித்தற்கான தொகை ரூ.9740/– னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

5) கூடலூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டம் 2016–2017 கூடுதல் அலுவலக கட்டிடம் கட்ட திருவாளர்.முதல்வர் அரசு கலை கல்லூரி அவர்களிடம் வடிவமைப்பு தயாரித்தமைக்கு செலவினத் தொகை ரூ.45000/– மற்றும் சேவைவரி ரூ.8100/– இத்தொகையினை The Principal Govt College of Technology, Coimbatore-13 என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 14 ல் அமைந்துள்ள நவீன எரிவாயு மின் மயானத்திற்க்கு மராமத்து பணிகளும் மற்றும் பழுது பணிகளை செய்ய பொது மக்கள் கேட்டு கொண்டதற்கிணங்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

7) இந்நகராட்சியின் பொறியியல் பிரிவிற்க்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 43 Z 5433 ற்கு ஏழு டயர்கள் முற்றிலும் தேய்ந்த நிலையில் உள்ளதால் தற்போது குடிநீர் வாகனத்தில் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே வாகனத்தின் ஏழு டயர்கள் ரீபெல்ட் செய்ய தோராயமாக ஆகும் செலவினம் ரூ.35000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

8) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூடலூார் நகராட்சியில் 11.07.2019 அன்று ஆய்வு மேற்கொண்டபோது தற்போது பருவமழை காலமாதலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளுக்காகவும், அவசர கால பணிகளுக்காக மரம் வெட்டும் இயந்திரம் (Power Saw) மற்றும் களைச் செடிகள் வெட்டும் இயந்திரம் (Wood Cutter) ஆகியவற்றை கொள்முதல் செய்து தயார் நிலையில் வைத்திருக்க அறிவுரை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி மரம் வெட்டும் இயந்திரம் மற்றும் களை வெட்டு இயந்திரம் ஆகியவற்றை தலா ஒரு இயந்திரம் வாங்க உத்தேச செலவினம் ரூ.50000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேரூந்து நிலையம் V.J.Travel முதல் வெஸ்டேன் பேக்கரி Reach -2 கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு தீர்மானம் எண் 14 நாள்.31.01.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 23.01.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேரூந்து நிலையம் V.J.Travel முதல் வெஸ்டேன் பேக்கரி Reach -2 கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | ரூ.10.00 | திரு.உசைன் | 0.23% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.ஜீவகன் | 0.54% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.23% விட குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.உசைன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்.

2) 0.23 சதவீதம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.உசைன் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

10) இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் வெஸ்டேன் பேக்கரி முதல் கேக் பேலஸ் வரை கழிவு நீர்க கால்வாய் அமைத்தல் Reach -3 பணிக்கு தீர்மானம் எண் 15 நாள்.31.01.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 23.01.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் வெஸ்டேன் பேக்கரி முதல் கேக் பேலஸ் வரை கழிவு நீர்க கால்வாய் அமைத்தல் Reach -3 | ரூ.10.00 | திரு.ஜீவகன் | 0.25% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 2.83% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.25% விட குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ஜீவகன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) அனுமதி வழங்கலாம்.

2) 0.25 சதவீதம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ஜீவகன் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

11) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 ல் மில்லிக்குன்னு பணியர்மட்டம் பகுதியில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய மேற்கொள்ளும் பணிக்கு செலவினம் ரூ.1.95 இலட்சத்திற்கு இந்நகரமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி 18.06.2019 நாள் மாலை 3.30 மணிக்கு பெறப்பட்டதின் விபரம்

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 ல் மில்லிக்குன்னு பணியர்மட்டம் பகுதியில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டி பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்தல் | ரூ.1.95 | திரு.ஜீவகன் | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.உசைன் | 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி 0.11% விட குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ஜீவகன்அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –1)** அனுமதி வழங்கலாம்.

2) 0.11 சதவீதம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.ஜீவகன்அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

12) முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, முதிர்கண்ணி , மாற்றுத் திறனாளி மற்றும் DDWP உதவித் தொகை பெறுவதற்கு வறுமை கோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 2 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்கான மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. திருமதி.ராணி, – முதியோர்
   க/பெ.ராமையா(லேட்)
   12/172C, மாக்கமூலா,கூடலூர்.
2. திரு.லோகநாதன் – முதியோர்
   த/பெ.தாணன்
   இரண்டாம் மைல், கூடலூர்

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

13) இந்நகராட்சியில் 2018–2019 ம் ஆண்டிற்க்கு மேற்கொண்ட வளர்ச்சிப்பணிகளுக்கான செலவு பட்டியல் தொகைகளை நகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்களின் செலவு பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொகை அரசு கணக்கில் செலுத்துப்பட்டு பின்னர் E-Filing செய்யப்பட்டுள்ளது. 2018–2019 ம் வருடத்திற்கு ஒப்பந்தாரர்களுக்கு E-Filing செய்து கொடுத்தமைக்கு திரு.செந்தில்நாதன், ஆடிட்டர்,திருச்சி அவர்களுக்கு தொகை ரூ.12000/– செலுத்தவேண்டியுள்ளது. அவ்வாறு தொகை ரூ.12000/– செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

14) இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு மூன்று இரும்பு அலமாரிகள் வாங்கிக் கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ.50000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 3 இரும்பு அலமாரிகள் வாங்கிக் கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.50000/– த்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

15) இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் 09.05.2019, 11.05.2019 மற்றும் 14.05.2019 ஆகிய தினங்களில் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை விபரம் | |
|---|---|---|---|
| | | 36 Inch | 42 Inch |
| 1 | Laxmi & Co,Calicut Road, Gudalur | ரூ.18600/– | ரூ.24800/– ($6^{1/2}$ அடி) |
| 2 | Jayarathna Plastics, 10/66J,Mysore Road, Gudalur | ரூ.18600/– | ரூ.25000/– ($6^{1/2}$ அடி) |
| 3 | Kumaran Trading Company | ரூ.18400/– | ரூ.24300/– ($6^{1/2}$ அடி) |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.3 ல் கண்ட Kumaran Trading Company என்பவரது குறைந்த விலை புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 3 எண்ணிக்கை இரும்பு அலமாரி வாங்கிக் கொள்ள ஏற்படும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மற்றும் அனுமதி வழங்கலாம்.

16) அரசாணை நிலை எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (இ.சி.உ) துறை நாள்.25.06.2018—ன் படி 01.01.2019 முதல் தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தலுக்கு பின் தூக்கியெறியக் கூடிய பல்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார கேடு ஏற்படுவதை முற்றிலுமாக தவிர்க்கவும், நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி பகுதிகளிலும் 19 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்கவும், விற்பனை செய்யவும் தடை செய்து, நீலகிரி மாவட்ட அரசிதழில் (அரசிதழ் எண்.2, நாள்.09.05.2018) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை தவிர பயன்பாட்டில் உள்ள இதர பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பறிமுதல் செய்யப்படும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கா வண்ணம் உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிக பட்ச பயன்களை பெறும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதி 2016—ன் விதி 5, 6 மற்றும் 7—ல் தார் சாலை பணிகளில் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் ஊக்குவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதி 2016 (Plastic Waste Management Rules 2016)—ன் பிரிவு 5, 6 மற்றும் 7—ற் கிணங்க, மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிகபட்ச பயன்களை பெறும் பொருட்டும் கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் பல்வேறு துறைகளின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் தார்சாலை பணிகளில் அரைக்கப்பட்ட பிளாஸ்டிக்கினை இந்திய அரசின் தேசிய ஊரக சாலைகள் மேம்பாட்டு முகமை, பரிந்துரைத்த 8 விழுக்காட்டுக்கு மிகாமல் தாருடன் கலந்து பயன்படுத்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**அலுவலக குறிப்பு —** அனுமதி வழங்கலாம்

17) நீலகிரி மாவட்டம் ஒரு சுற்றுலா மாவட்டம் என்பதால் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை மேலும் மேம்படுத்திட பல்வேறு வகையான நடவடிக்கைகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், விளம்பர பலகைகள் / பேனர்கள் பதாகைகள் வைப்பது மற்றும் பொது இடங்களில் சுவரொட்டிகள் வைப்பது மற்றும் ஒட்டுவது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகள் அரசால் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் 1959–ம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் (The Tamilnadu Open Places (Prevention fo Disfigurement) Act 1959, உயர் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் அரசின் உத்தரவிற்கிணங்க தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு தனியார்அமைப்புகளால், பொது இடங்களிலும், தனியார் இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவது, நீலகிரி மாவட்டத்தின் அழகினையும், சுற்றுச்சூழலையும் சீர்குலைப்பதாக உள்ளது. எனவே, நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை கருத்தில் கொண்டு, உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தின் கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள பொது இடங்கள், இயற்கை வளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு நபரும் / அமைப்பும் சுவரொட்டிகள் வைக்கவும், சுவரொட்டிகள் ஒட்டவும் தடை விதித்தும், மேலும், தடையை மீறி சுவரொட்டிகள் வைப்பவர் மற்றும் ஒட்டுபவர் மீது தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் 1959–ன் கிணங்க ரூ.5000/– சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் மூலம் அபராதம் விதிக்க தீர்மானிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

18) கூடலூர் நகராட்சியில் 156.06 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. கூடலூர் நகராட்சிக்குட்பட்ட சாலைகள் இயற்கை இடர்பாடுகள் காரணமாக பழுதடைந்த சாலைகளை உடனடியாக சரி செய்ய வேண்டி இருப்பதால் முக்கியமான தார்சாலைகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் மூலம் 2019–2020–ம் ஆண்டில் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 கோடி செலவில் சரி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3, 5, 6, 8, 9, 14,15,18 மற்றும் 21 முதன்மை அஞ்சலக சாலை, குசுமகிரி சாலை, பள்ளிப்படி சாலை, சளிவயல் சாலை, மஞ்சமூலா சாலை, அத்திபாளி முதல் கொக்ககாடு சாலை, விமலகிரி முதல் மொத்தவயல் சாலை, விமலகிரி சாலை முதல் நாயக்கம்பாடி சாலை வரை, விமலகிரி சாலை முதல் மங்குழி சாலை வரை, கிரீன்வேல் சாலை, மார்த்தோமா நகர் முதல் கொங்கன்வயல் சாலை வரை மற்றும் செலுக்காடி சாலையை மேம்படுத்துதல். | 300.00 |

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்

19) கூடலூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதி 2016 ( Plastic Waste Management Rules 2016) ன் பிரிவு 5, 6 மற்றும் 7 ற்கிணங்க மறு சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கும் குறித்த அறிவிப்பினை பொது மக்கள் அறியும் வகையில் நீலகிரி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.4500/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்

20) கூடலூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கூடலூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து செயல்ப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் கையாளுதல் (Secondary Storage and Transportation) ) செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே கூடலூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declaration) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்

21) கூடலூர் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பாராமரிக்கப்பட்டு வருகிறது என்பதை சுய உறுதி மொழி சான்றிதழுக்கு (Self Declarations) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** அனுமதி வழங்கலாம்

22) இந்நகராட்சிக்குட்பட்ட 27th மைல் சில்வர் கிளவுட் பகுதியில் உரம் தயாரிப்பதற்கு உரக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு சாலை அமைப்பதற்கு தீர்மான எண் 16 நாள் 31.01.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள 09.07.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரபெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் கீழ்வருமறு.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தபுள்ளி விபரம்** |
|---|---|---|---|---|
| 1 | 27th மைல் பகுதியில் உள்ள நகராட்சி உரக்கிடங்கிற்கு சாலை அமைத்தல் | 8.70 | திருவாளர்.அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீட்டை விட **0.07%**குறைவு |
| | | | திரு.உசைன் | மதிப்பீட்டை விட **0.07%**குறைவு |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின் 0.07% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர்.அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி வழங்கலாம்.

**2)** 0.7% குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர். அசோசியேட் கண்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**